1987 மே 5]

மீட்டர் தூரம் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சில இடங்களில் தண்ணீர் நல்ல முறையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் ஒரு சில இடங்களில் தண்ணீர் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. எனவே இந்த இடப்பிரச்சினை ஒரு கிலோமீட்டர் என்பதை மாற்றி தண்ணீர் எங்கு இருக்கிறதோ அங்கே போடுவதற்கு அரசாங்கம் உத்தரவு இடுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இந்தக் குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டி, அந்தச் செயல்முறைகளையும் உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இப்போது புதிய உத்தரவு ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறப்பித்து இருக்கிறார்கள். பத்திரிகைகள் வாயிலாக நீங்கள் எல்லாம் அறிந்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். தனியார் கிணறுகளில் தண்ணீர் இருந்தால்கூட அவசியத் தேவையைக் கருதி அந்தக் கிணறுகளை எடுத்துக்கொண்டு பொது மக்களுக்கு நீர் வழங்கலாம் என்ற புதிய உத்தரவினை அவர்கள் பிறப்பித்து இருக்கிறார்கள். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) எந்த இடத்தில் பிரச்சினை வந்தாலும் அவைகள் உடனடியாகக் கவனிக்கப்படும்; தீர்க்கப்படும்.

உமறுப்புலவர் நினைவு நூலகம்

594—(*வினா எண் 3536-ஏ) திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உமறுப்புலவர் நினைவு நூலகம் ஒன்று ஏற்படுத்தி உமறுப்புலவர் அவர்களது நூல்களை ஆராய்ந்து டாக்டரேட் செய்வதற்கு வகை செய்யும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உமறுப்புலவர் கிளை நூலகம் ஒன்று திருநெல்வேலி மாவட்டம் எட்டையபுரத்தில் ஏற்படுத்த திட்டம் உள்ளது. அரசாணை எண் 199, கல்வி, நாள் 1985 மார்ச் மாதம் 7 ஆம் நாளில் உமறுப்புலவர் கிளை நூலகக் கட்டிடம் ரூ. 3.5 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக் குழுவினால் எட்டையபுரத்தில் கட்டிக் கொள்ள அரசு அனுமதியளித்துள்ளது.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, எட்டையபுரத்தில் உமறுப்புலவர் கிளை நூலகம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு விஜயம் செய்யும்போது அறிவித்தார்கள். ஆனால் இதுவரையில் நூல் நிலையம் கட்டப்பட வில்லை. மேற்கொண்டு காலதாமதம் இன்றி நூல் நிலையம் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப்போல உமறுப்புலவருடைய நினைவாக 3½ இலட்சம் ரூபாய் செலவில் ஒரு நூலகம் கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த ஆணை இட்டு அது நடைமுறையில் இருந்து வருகிறது. கட்டிட வேலை முடிந்துவிட்டது. வெள்ளை அடிக்கின்ற வேலை இருக்கிறது. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முடிந்துவிடும் என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

ஆசிரியர்கள் அரசு ஊழியர்களான பின் அவர்களது பணியினை கண்காணித்தல்.

(பேரவைத் துணைத் தலைவர்)

595—(*வினா எண் 4578) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தில் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிய பிறகு அவர்களின் பணியினைக் கண்காணிக்க அரசு செய்துள்ள ஏற்பாடுகள் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேற்கண்ட வினா தொடர்பாக ஓர் அறிக்கை* இப்பேரவையின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய கோரிக்கையை ஏற்று அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியபிறகு, அவர்கள் பணிகளைக் கண்காணிப்பதில் இருக்கின்ற கட்டுப்பாடு கொஞ்சம் தளர்ந்திருக்கிறது. விவா அறிக்கையில் 366 உதவி கல்வி அலுவலர்கள்

ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.